III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.34/2014

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Tmt.R.Shanthi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 24-01-2020

| | | | |
|---|---|---|---|
| Name | :Sivakumar | Caste | |
| Father's/Husband's Name | :Bhakthavatchalu | Calling : | |
| Age | : | Religion : | |
| Village | : | Taluk : | |

<u>பிரதிவாதிகள் 7 முதல் 9 மற்றும் 11 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u> கோலடியில் உள்ள இடம் எதற்காக வாங்கப்பட்டது என்றால் புதிய பார்ட்னெர் ஷிப் பிஸினஸ் தொடங்குவதற்காக அதாவது விஸ்வஜோதி பிரிக் இண்டஸ்டிரீஸ் தொடங்குவதற்காக வாங்கப்பட்டது. விஸ்வஜோதி பிரிக் இண்டஸ்டிரீஸ் நிறுவனத்தில் பக்தவட்சலு மற்றும் கோவிந்தசாமி பங்குதாரர்களாக இருந்தார்கள். இருவருக்கும் தலா 50 சதவீதம் பங்கு இருந்தது. அந்த நேரத்தில் சுப்பையா நாயுடு மற்றும் அவருடைய எல்லா மகன்களும் இருந்தார்கள் அந்த நேரத்தில் அவருடைய மகள் வனஜா இருந்தார்களா என்றால் இருந்தார். விஸ்வஜோதி பிரிக் இண்டஸ்டிரீஸ் சுப்பையா நாயுடுவிற்கும் மற்ற மகன்களுக்கும் மற்றும் மகள் வனஜாவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. 1992ல் ஒரு பங்குதாரர் பக்தவட்சலு தவறிவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான நான் சிவகுமார், என்னுடைய அம்மா சாந்தி, என்னுடைய சகோதரர் கார்த்திக் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டது. இந்த பார்ட்னெர் ஷிப் பிசினஸ் 1999 வரை நடைபெற்று வந்தது. அதன் பிறகு இந்த பார்ட்னெர் ஷிப் பிசினஸ் செயல்படாமல் நின்றுவிட்டது. என் அப்பா இறந்த பிறகு 50 சதவீத பார்ட்னெர் ஷிப் பிசினஸ் அசெர்ட்ஸ் அவருடைய வாரிசுகளான நான் சிவகுமார், என்னுடைய அம்மா சாந்தி, என்னுடைய சகோதரர் கார்த்திக் வசம் இருந்தது. மற்ற பங்குதாரரான கோவிந்தசாமி 2009ல் இறந்துவிட்டார். 2 பங்குதாரர்களும் இறந்த பிறகு அந்த பார்ட்னெர் ஷிப் பிசினஸ் நடந்த இடத்தினை மட்டும் அப்கார்ன்ஸ் இன்ப்ராஸ்டரக்ச்சர்ஸ் என்ற நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பபட்டது. குத்தகை தொகையை யார்யார் வாங்கிவருகிறார்கள் என்றால் பக்தவட்சலு மற்றும் கோவிந்தசாமியின் வாரிசுகள் வாங்கி வருகிறோம் மற்ற யாருக்கும் இந்த தொகையில் உரிமை இல்லை. 'டி' ஷெட்யூல் சொத்துள்ள பெருமாள்அகரம் என்ற இடத்தில் வீட்டு மனைகள் மற்றும் வீடு உள்ளதா

என்றால் உள்ளது. அயிட்டம் 1 உள்ள 38 சென்ட்டில் வீடு உள்ளதா என்றால் வீடு உள்ளது அந்த வீடும் மனையும் யாரின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் நானும் என்னுடைய குடும்பத்தாருடைய வசத்தில் உள்ளது. அயிட்டம் 2ல் உள்ள இடத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது அது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் பாபு நாயுடு வின் மகன் கிருஷ்ணகுமார் வசம் உள்ளது அயிட்டம் 3 கோவிந்தசாமியின் வாரிசுகளின் வசத்தில் உள்ளது அயிட்டம் 4 வாதிகளின் வசம் உள்ளது அயிட்டம் 5 ல் இடிந்து போன வீடு உள்ளது அந்த இடத்தில் யாரும் இல்லை அயிட்டம் 6 காலிமனையாகும் அது யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் ராமமூர்த்தியின் மகள்கள் அதாவத ராஜலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் வசத்தில் உள்ளது. 'இ' ஷெட்யூல் சொத்து வேலப்பன் சாவடியில் உள்ளது என்றால் சரிதான் 45 சென்ட் இடம் உள்ளது அந்த இடத்தை 1979ல் என்னுடைய தாத்தா சுப்பையா நாயுடு வாங்கினார். பின்னிட்டு அந்த இடத்தில் கட்டிடம் எந்த வருடத்தில் கட்டப்பட்டது என்றால் 1999ல் கட்டப்பட்டது. 1999க்கு முன்பாக சுப்பையா நாயுடு ஒரு கட்டிடம் அந்த இடத்தில் கட்டியுள்ளார் 1999க்கு பிறகு சுப்பையாநாயுடுவின் வாரிசுகள் அதாவது கோவிந்தசாமி மற்றும் பக்தவட்சலுவின் வாரிசுதாரர்கள், ராமமூர்த்தியின் வாரிசுதாரர்கள், தாமோதரன் வாரிசுதார்கள் அவர்கள் எல்லாம் கட்டினார்கள். அந்த கட்டிடம் கட்டியதில் சுப்பையா நாயுடுவின் மகள் வனஜாவிற்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. மேற்சொன்ன கட்டிடத்தை KIML என்ற நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இந்த வாடகையை யார் வசூலித்து வந்தார் என்றால் கோவிந்தசாமி மேற்சொன்ன நபர்களின் முகவர் என்ற ஓதாவில் வசூலித்து வந்தார். 2006 லிருந்து 2014 வரை தொடர்ந்து யார் வசூலித்து வந்தார் என்றால் 2009 வரை கோவிந்தசாமி வசூலித்து வந்தார் அவருக்கு பிறகு சுப்பையா நாயுடுவின் வாரிசுதாரர்கள் மொத்தமாக சென்று வசூலித்து வந்தார்கள். 'எப்' ஷெட்யூல் அமஞ்சிகரை வீட்டு மனைகள் 5250 சதுர அடிகள் இருக்கும் இதை சுப்பையாநாயுடுவின் 4 மகன்கள் 1969ல் வாங்கினார்கள். வாடகையை 4 மகன்களும் வசூலித்து வந்தார்கள். 2007லிருந்து ராமமூர்த்தியின் வாரிசு வசூலித்து வந்தார்கள். மாத வாடகை சுமார் 3 இலட்சம் இருக்கும். இந்த கட்டிடத்தின் தரைதளம், முதல் தளம் மற்றும் 2ம் தளம் உள்ளது. 'இ' ஷெட்யூல் உறவுஸிங் போர்டு சொத்தானது யார் பெயரில் அலாட்மெண்ட் செய்யப்பட்டது என்றால் கோவிந்தசாமி பெயரில் அலாட்மெண்ட் செய்யப்பட்டது. அந்த சொத்தில் எங்களுடைய பிரான்ச்சுக்கும் மற்ற பிரான்சுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சுப்பையா நாயுடு உயிருடன் இருந்த காலத்தில் வருமான வரி செலுத்தி வந்தாரா என்றால் ஆமாம். அவருடைய விவசாய நிலத்தில் வரும் வருமானத்திற்கும் மற்றும் விஸ்வஜோதி

பிரிக் ஒர்க்ஸ் நிறுவனத்திலிருந்து வரும் வருமானத்திற்கும் சேர்த்து தான் வருமான வரி கணக்கு செலுத்தி வந்தார். சுப்பையா நாயுடு சொத்து தவிர மற்ற ஒவ்வொரு பிரான்ச்சுக்கும் தனிப்பட்ட சொத்து உள்ளது.

பிரதிவாதிகள் 10 மற்றும் 12 தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைப்பு.